<u>சுருக்கம்</u>

ஜவுளித் தொழில் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைத்தல் மற்றும் அப்பூங்காக்களின் உட்கட்டமைப்பிற்கான செலவினத் தொகையில் 50 சதவிகிதம் அளவிற்கு ரூ.2.50 கோடிக்கு மிகாமல் மாநில அரசின் மானியம் வழங்கி – நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு – ஆணை வெளியிடப்பட்டது – திருத்த ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை</u>

அரசாணை (நிலை) எண்.131

நாள்: 06.09.2019
விகாரி, ஆவணி 20
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.195, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை, நாள் 30.12.2015
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் எண்.10415/2019/பி1, நாள் 15.04.2019.

*****

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.195 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, நாள். 30.12.2015–இல் வெளியிடப்பட்ட பத்தி 4–இல், நிபந்தனை எண்.3–க்கு பின்வருமாறு திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

<u>திருத்தம்</u>

"3. இவ்வாறு அமையவுள்ள ஜவுளிப் பூங்கா குறைந்தபட்சம் 3 தொழிற்கூடங்களுடன் குறைந்தபட்சமாக 2 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட வேண்டும்".

2. மேலும், சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்க தொழிற்முனைவோர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்படும் பட்சத்தில், அரசின் மானியத்தினை விடுவிக்கும் பொருட்டு புதிய கணக்குத் தலைப்பு கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநருக்கு வழங்கப்படும்.

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.40776/நிதி (தொழில்கள்)/2019, நாள். 29.08.2019 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், குறளகம், சென்னை–108.